**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## <u>அவசரக் கூட்டப்பொருள்</u>

2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(2)ன்கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## <u>பொருள்கள்</u>

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 28.11.2014 | 1) தூத்துக்குடி மாநகராட்சி 2014 மேயர் தேர்தலுக்கு வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடம் காமராஜர் கல்லூரி வளாகத்தில் வாக்கு எண்ணிக்கை நடைபெறுவதற்கு இரும்பு வலை, பார்டிசன் அமைக்கவும் , EVM வைப்பு அறை தயார் செய்யவும், வாக்கு பதிவு பொருட்கள் வைப்பு அறை மற்றும் தடுப்பு சுவர் அமைப்பதற்கு மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 3,50,000/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம்<br>மதிப்பீடு எண்.97/14–15 | 133)பதிவு செய்யப்பட்டது |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சி பராமரிப்பில் உள்ள குருஸ்பர்னாந்து சிலை அருகில் உள்ள தெப்பத்தில் சுற்றுசுவர் அமைப்பதற்கு மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 75994/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>மதிப்பீடு எண். 104/14–15 | 134)பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 3) தூத்துக்குடி மாநகராட்சி பராமரிப்பில் உள்ள சத்திரம் தெரு அம்மா உணவகம், தெற்கு புது தெரு பள்ளி, சி.வ. பள்ளி, கிழக்கு மண்டல அலுவலகம், ஸ்டேட்பேங்க் காலனி மகப்பேறு மையம் ஆகிய இடங்களில் மழைநீர் சேமிப்பு அமைப்பதற்கு மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ. 1,23,880/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம் மதிப்பீடு எண். 84/14–15 | 135) பதிவு செய்யப்பட்டது |
| | 4) தூத்துக்குடி மாநகராட்சி பராமரிப்பில் உள்ள பழைய பேருந்து நிலையத்தில் மழைநீர் சேமிப்பு அமைப்பதற்கு மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 72,826/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>மதிப்பீடு எண். 28/14–2015 | 136)பதிவு செய்யப்பட்டது |
| | 5) தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோவை, இயக்குநர் (பொ) அவர்களின் 11.11.2014ம் தேதிய ந.க.எண். 49/2014/கணக்கர் கடிதத்தில் கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு இம்மாநகராட்சியின் சார்பாக 2013 – 2014 மற்றும் 2014–2015ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பங்குத் தொகையாக ரூ 2,00,000/– + ரூ 2,00,000/–ஆக மொத்தம் ரூ. 4,00,000/– செலுத்தும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இம்மாநகராட்சி சார்பாக ரூ 4,00,000/–ஐ கோவை தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். சி1/18532/2010 | 137) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 6) இம்மாநகராட்சி பாளையங்கோட்டை ரோடு மேற்கு பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான மையவாடியில் 2வது வாடியில் செயல்பட்டு வரும் சைவ வேளாளர் சமுதாயத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மைய வாடியில் அமைந்துள்ள இறந்தவர்களை எரியூட்டும் ஷெட் விழுந்து பராமரிப்பின்றி பழுதடைந்து உள்ளதால் ஈம சடங்குகள் நடத்துவதில் சிரமம் இருந்து வருவதாலும், மேற்கண்ட இடத்தில் முட்கள் நிறைந்து உள்ளதாலும் | 138) பொருளில் குறிப்பிட்டுள்ள மையவாடியில் சைவ வேளாளர் சமுதாயத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள |

| | | |
|---|---|---|
| | அதனை சீர்படுத்திடவும் மேலும் மேற்படி இடத்தில் சைவ வேளாளர் சங்கத்தின் மூலம் சொந்த செலவில் தொடர் பராமரிப்பு பணி மேற்கொண்டு காவலர் நியமனம் செய்திடவும் சங்கத்தின் செயலாளர் அனுமதி வழங்க கேட்டுள்ளார்கள்.<br><br>எனவே மேற்கண்ட மையவாடியில் சைவ வேளாளர் சமுதாயத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் சைவ வேளாளர் சங்கத்தின் மூலம் சொந்த செலவில் இறந்தவர்கள் எரியூட்டும் ஷெட் அமைக்கவும், மேற்கண்ட இடத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் சங்கத்தின் சார்பில் இரவு காவலர் நியமனம் செய்வதற்கும் அனுமதி வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் முடிவு செய்யலாம்.<br><br>இ1/9783/2014 | இடத்தினை மேற்படி சைவ வேளாளர் சங்கம் மூலம் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளவும் இரவு காவலர் நியமனம் செய்வதற்கும் மாநகராட்சி நிபந்தனைகளுக்கு ட் பட்டு அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்ட து. |
| | 7) தூத்துக்குடி மாநகராட்சி சாமுவேல்புரம் பள்ளி, புதிய மாநகராட்சி அலுவலகம், சந்தண மாரியம்மன்கோவில் அம்மா உணவகம் ஆகிய இடங்களில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைப்பதற்கு மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 47620/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு –** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>மதிப்பீடு எண். 83/14–15 | 139) பதிவு செய்யப்பட்டது. |
| | 8) நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் மின்னஞ்சல் கடிதம் எண்.13808/201/பி1,நாள்.08/08/2013 இல் திறந்த வெளி கழிப்பிடங்களை தூய்மை ஆக்கும் திட்டத்தின் கீழ் புதிய கழிப்பிடங்கள் நம்ம டாய்லெட் கட்டுவதற்கு உலகளாவிய மாதிரி கட்டிட (Universal Design Toilet) வரைபடத்தின் படி பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதின் பேரில்,ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மாமன்றம் தனது தீர்மானம் எண்.23,நாள்.22.01.2014 இல் மெசர்ஸ் ஹோர் டெக் கிளாஸ் காம்போசிஸ்ட்ஸ் சென்னை நிறுவனத்திற்கு ஒப்புதல் செய்து அதன் பேரில் வேலை உத்தரவு வழங்கப்பட்டது.<br><br>ஆனால் மேற்கண்ட நிறுவனம் வேலை உத்தரவு பெற்றுகொண்டு, நாளது தேதி வரை வேலைக்கான ஒப்பந்தப்பத்திரம் ஒப்பம் | 140) அலுவலகக்குறிப் பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட் டது. |

| | | | |
|---|---|---|---|
| | | செய்து இவ்வலுவலகத்தில் இதுவரை சமர்ப்பிக்காமலும், மேலும் வேலை உத்தரவுபடி மாநகராட்சிப்பகுதியில் 10 இடஙகள் நம்ம டாய்லெட் கழிப்பறை கட்டப்பட வேண்டும். ஆனால் 7இடஙகளில் மட்டும் அதற்கான முதற்கட்ட பணிகளான அஸ்திவார பணிகள் மட்டும் ஆரம்பிக்கப்பட்டு மீதபணிகள் நாளது தேதி வரை மேற்கொள்ளப்படாமலும் பணிகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லாமல் இருந்து வந்துள்ளதால் மேற்படி நிறுவனத்திற்கு இவ்வலுவலகம் மூலம் விளக்கம் கேட்டு 07.11.2014 இல் அறிவிப்பு அனுப்பப்பட்டு.உரிய விளக்கம், ஏதும் மேற்படி நிறுவனத்தால் இவ்வலுவகத்தில் சமர்பிக்கப்படவில்லை.<br><br>எனவே பொது மக்கள் மத்தியில் மாநகராட்சி நிர்வாகத்திற்கு அவப்பெயர் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு மெசர்ஸ் ஹோர் டெக் கிளாஸ் காம்போசிஸ்ட்ஸ்,சென்னை நிறுவனத்திற்கு திறந்த வெளி கழிப்பிடஙகளை தூய்மை ஆக்கும் திட்டத்தின் கீழ் புதிய கழிப்பிடஙகள் நம்ம டாய்லெட் கட்டுவதற்கு வழஙகப்பட்ட வேலை உத்தரவினை ரத்து செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அ,கு:** 1.மெசர்ஸ் ஹோர் டெக் கிளாஸ் காம்போசிஸ்ட்ஸ்,சென்னை நிறுவனத்திற்கு வழஙகப்பட்ட வேலை உத்தரவை ரத்து செய்யலாம்.<br>2. மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். இ1/8708/2013 | |
| | 9) | இம்மாநகராட்சி பொதுசுகாதார பிரிவின் கீழ் மூன்று நகர்நல மையஙகள் செயல்பட்டு வருகிறது.அவற்றில் பாத்திமாநகர் நகர்நல மையம் மிகவும் பழுதடைந்து உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளது அதனை சரிசெய்து பொதுமக்களுக்கு மருத்துவ சேவை செய்யும் பொருட்டு,மேற்படி பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய நகர்நலமையம் கட்டுவதற்கு சீஸா ஸ்டெர்லைட் நிறுவனத்தின் முழுபஙகளிப்பு கோரப்பட்டது.நமது கோரிக்கையினை ஏற்று மேற்படி நிறுவனம் ரூபாய் 35.00 இலட்சத்தில் புதிய நகர்நலமையம் கட்டிதர சம்மதித்து கடிதம் பெறப்பட்டுள்ளது.<br>மேலும் மேற்படி பழைய நகர்நலமைய கட்டிடத்தினை முழுமையாக இடித்து அப்புறப்படுத்திவிட்டு அந்த இடத்தில் புதிய கட்டிடம் ஸ்டெர்லைட் நிறுவனம் மூலம் கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம் .எச்1/3513/2014 | **141)** அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>
10) இம்மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட ஆண்டு குத்தகை இனஙகளின் கீழ் மாமன்ற தீர்மான எண்.278 நாள் 24.12.2012 அனுமதிக்கப்பட்ட நகர்புற குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பூபாலராயர்புரம் இன்பார்மல் மார்கெட் (மட்டன் மார்க்கெட் காய்கனி மார்கெட், மீன்மார்க்கெட்)இனத்திற்கு உயர்ந்தபட்ச கேள்வி அனுமதிக்கப்பட்டு உரிமம் வழஙகப்பட்ட உரிமம்தாரருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள 2013–2014ம் வருட உரிமைத்தொகையில் 5 % உயர்வு செய்து 2014–2015 ம் வருடம் உரிமம் நீடித்து வழஙகக்கோரி உரிமம்தாரர் டி.அருண்குமார் என்பவர் சமர்ப்பித்துள்ள சம்மதக்கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது
<table>
<tr><th>வ. எண் (1)</th><th>ஏல இனம் (2)</th><th>உரிமம்தாரர் பெயர் மற்றும் முகவரி (3)</th><th>2013–2014 ஏலத் தொகை (4)</th><th>5 % உயர்வு தொகை (5)</th><th>2014–2015 ஆண்டு நிர்ணயம் செய்ய வேண்டிய தொகை (6)</th></tr>
<tr><td>1</td><td>பூபாலராயர்புரம் இன்பார்மல் மார்கெட் (மட்டன்மார்க்கெட், காய்கனிமார்கெட், மீன்மார்கெட்)</td><td>டி.அருண் குமார் 175/5H திரேஸ்புரம் தூத்துக்குடி</td><td>1,06,995 /–</td><td>5,350/–</td><td>1,12,345/–</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு:<br>
மேற்கண்ட பட்டியலின்படி குத்தகை இனத்திற்கு 2013–2015ம் ஆண்டு பொது ஏல நிபந்தனையின்படி 2014–2015ம் ஆண்டிற்கு உரிமம் நீடித்து வழஙகும்படி தற்போதைய உரிமம்தாரர் கோரியுள்ள விண்ணப்பத்தினை ஏற்று கலம் 6ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஆண்டு குத்தகை தொகைக்கு 2014–2014ம் ஆண்டிற்கு 2012–2015ம் ஆண்டு ஏல நிபந்தனைக்கு உட்பட்டு உரிமம் நீட்டித்து வழஙக மாமன்றம் அனுமதிக்கலாம்<br>
அ16/18429/2012
</td><td>142) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td></td><td>
11) தூத்துக்குடி மாநகராட்சி பகுதிக்கு குடிநீர் பம்பிங செய்யப்பட்டு வரும் 400 mm C1 இரண்டாவது பைப் லைன் ராசாங குளம் நடுவில் உடைப்பு ஏற்பட்டதை குடிநீர் அவசர அவசியம் கருதி உடனே சரி செய்ய மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ 94,704/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு – மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>
மதிப்பீட்டு எண். 112A/14-15
</td><td>143)பதிவு செய்யப்பட்டது</td></tr>
</table>

12) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் மின்னஞ்சல் கடிதம் எண்.14094/2014/இ3, நாள் 13/05/2014இல் மாநகராட்சி வார்டு பகுதிகளில் பழுதடைந்த சாலைகள், பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்கு தோண்டப்பட்ட சாலைகள் சீரமைத்தல் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளுக்கு தோண்டப்பட்ட சாலைகள் சீரமைத்தல் ஆகிய பணிகளை தமிழ்நாடு நகர்புற சாலைகள் கட்டமைப்பு திட்டத்தில் 2014–2015இன் (Tamil Nadu Urban Road infrastructure Project) கீழ் இம்மாநகராட்சி பகுதியில் உள்ள கீழ்க்கண்ட 26 சாலைகளில் ரூ 888.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மான்யம் பெற்று பணிகள் மேற்கொள்ளவும், பிரேரணை அனுப்பவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

144) அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப் பட்டது

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை (ரூ. இ |
|---|---|---|
| 1 | ஐயப்ப நகர் மற்றும் நேதாஜி நகர் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 39.50 |
| 2 | இன்னாசியார்புரம் தெரு 1, 2 மற்றும் 3வது தெரு பகுதியில் தார் சாலை மற்றும் பேவர் பிளாக் அமைக்கும் பணி | 17.50 |
| 3 | கிருஷ்ணராஜபுரம் 9வது தெரு மற்றும் முத்துக்கிருஷ்ணாபுரம் 6வது தெரு பகுதியில் தார் சாலை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 39.50 |
| 4 | லூர்தம்மாள்புரம் மெயின் ரோடு பகுதியில் தார்சாலை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணி | 38.00 |
| 5 | லயன்ஸ்டவுன் 4வது தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 15.00 |
| 6 | அண்ணாநகர் குறுக்குத்தெரு மற்றும் நடுத்தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 32.00 |
| 7 | டூவிபுரம் 2வது தெரு முதல் 5வது தெரு வரை உள்ள குறுக்கு சாலை பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 15.30 |
| 8 | பிரையண்ட் நகர் 13வது தெரு நடுப்பகுதி மற்றும் கிழக்கு பகுதியில் பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும பணி | 29.50 |
| 9 | சந்தணமாரி அம்மன் கோவில் தெரு பகுதியில் (மாநகராட்சி பள்ளி சாலை) தார் சாலை அமைக்கும் பணி | 30.30 |
| 10 | குமாரசாமி நகர் குறுக்கு தெரு மற்றும் எழில் நகர் 6வது மற்றும் 7வது தெரு பகுதியில் பேவர் பிளாக் அமைக்கும் பணி | 22.20 |
| 11 | ஜெயராஜ் ரோடு மெயின் பகுதியில் சாலை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் தார் சாலை அமைக்கும் பணி, மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் சென்டர் மீடியம் அமைக்கும் பணி | 117.50 |
| 12 | போல்டன்புரம் 3வது தெரு பகுதியில் தார் சாலை புதுப்பித்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 25.60 |
| 13 | திரேஸ்புரம் உடைமரத்தெரு பகுதியில் பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 13.50 |
| 14 | சுப்பையாபுரம் 4வது தெரு முதல் அரசு மருத்துவமனை வரை தார் சாலை புதுப்பித்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 15.50 |
| 15 | பாத்திமா நகர் மெயின் ரோடு முதல் பள்ளிவரை உள்ள பகுதியில் தார் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 24.00 |
| 16 | ஸ்டேட் பாங்க் காலனி வடக்கு (மின் வாரியம் எதிர்புறம்) பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 29.50 |
| 17 | பொன்சுப்பையா நகர் மெயின் ரோடு மற்றும் தஸ்நேவிஸ் நகர் மெயின் ரோடு பகுதியில் பேவர் பிளாக் அமைக்கும் பணி | 40.00 |
| 18 | தாமோதர நகர் மெயின் ரோடு பகுதியில் தார் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 40.00 |
| 19 | கிருஷ்ணாநகர், பேரின்ப நகர் மற்றும் தோப்புத்தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 51.50 |
| 20 | ஜெ.எஸ்.நகர் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 24.50 |
| 21 | காந்திநகர் மற்றும் நேசமணிநகர் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 20.90 |

| | | | |
|---|---|---|---|
| 22 | மகாலெட்சுமி நகர் மற்றும் ராஜிவ் நகர் குறுக்குத்தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 20.00 | |
| 23 | வரதராஜபுரம் தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 10.00 | |
| 24 | பால்பாண்டி நகர் 1வது தெரு முதல் அன்னைதெரசா நகர் வரை, ராஜீவ் நகர் 10வது தெரு இணைப்பு சாலை (10வது தெரு முதல் 8வது தெரு) | 39.50 | |
| 25 | வீரநாயக்கன்தட்டு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 39.50 | |
| 26 | கிருஷ்ணராஜபுரம் 1வது தெரு மற்றும் இணைப்பு சாலை 1வது தெரு மற்றும் 8வது தெரு பகுதியில் தார் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 97.70 | |
| | மொத்தம் | 888.00 | |

மேற்கண்ட விபரப்படி 26 சாலைகளில் தார் சாலை பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கவும் மதிப்பீடு தொகை ரூ 888.00 இலட்சத்திற்கு அரசுக்கு பிரேரணை சமர்ப்பித்து மான்யம் பெற்று பணிகள் செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/4465/2014

**13.** தூத்துக்குடி மாநகராட்சியில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து சுயவிருப்பத்தின் பேரில் **30.9.2014**ல் பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.வி. கந்தசாமி என்பவருக்கு அன்னார் பணிபுரிந்த காலத்தில் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி தொகைக்குரிய வட்டி மற்றும் அரசு மான்யத் தொகை ஆகியவற்றை அடியில் கண்ட விவரப்படி அன்னாருக்கு வழஙகப்பட வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 1. வட்டித் தொகை | ரூ. 8478/– |
| 2.அரசு மான்யத் தொகை | ரூ.10000/– |
| | ரூ.18478/– |

மேற்கண்ட தொகை ரூ 18478/– ஐ (ரூபாய் பதினெட்டாயிரத்து நானூற்று எழுபத்து எட்டு மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து அன்னாருக்கு வழஙக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதி வழஙகலாம். சி1/9271/2014

**145)** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப் பட்டது.

**14)**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் ஒருஙகிணைந்த பேருந்து நிலையம் அமைக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டதை தொடர்ந்து **08.11.2014** அன்று மாவட்ட ஆட்சித் தலைவர், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர், மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் தூத்துக்குடி நகரம் மீளவிட்டான் பகுதி–2 கிராமத்தில் அமைக்க உத்தேசித்து ஸ்தல ஆய்வு செய்யப்பட்டது என மாவட்ட ஆட்சித் தலைவர்

**146)** இம்மாநகராட்சிக் குட்பட்ட பகுதியான மீன்வளக்கல்லூரிக்கு எதிர்புறம்

| | | |
|---|---|---|
| | அவர்களின் கடிதம் ந.க.எண்.டி3/37327/2012 நாள் 20.11.2014இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் மேற்படி கடிதத்தில் புல எண் 1687 மற்றும் பல புல எண்கள் உள்ளடங்கிய 67.27.5 ஹெக்டேர் பரப்பளவில் மேற்படி இடத்தில் கனரக வாகன முனையம், மாவட்ட காவல் ஆயுதப்படை வளாகம் உட்பட பல்வேறு திட்ட பணிகளுக்கு இடம் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் , இவ்வாறான நிலையில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்கும் பணி மிக முக்கியமானதாகக் கருதப்படுவதால் அதற்காக தேவைப்படும் இடத்தின் அளவினை மாமன்றத்தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 21.11.2014ம் தேதியிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளபடி இம்மாநகராட்சிப் பகுதியில் அமையவுள்ள ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்திற்கு மீன்வளக் கல்லூரிக்கு எதிர்புறம் அமைந்துள்ள தொழில்துறை புறம்போக்கு இடத்தில் 25 ஏக்கர் இடம் ஒதுக்கீடு செய்திட கேட்டு மாவட்ட ஆடசித் தலைவர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும், மேலும் மேற்கண்ட இடத்தில் 25 ஏக்கர் பரப்பளவில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு –** மாமன்றம் முடிவு செய்யலாம். இ1/15104/2011 | உள்ள தொழில்துறை புறம்போக்கு இடத்தில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைவ்தற்கு 25 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம் ஒதுக்கீடு செய்திடுமாறு மாவட்ட ஆட்சியருக்கு பிரேரணை அனுப்ப தீர்மானிக்கப் பட்டது. மேலும் இப்பொருள் தொடர்பாக 15.10.2012 இல் நிறைவேற்றப்பட்ட மாமன்ற தீர்மானம் எண்.214ஐ ரத்து செய்யவும் தீர்மானிக்கப் பட்டது. |
| | 15)இம்மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் குருஸ்புரம் மகப்பேறு மையம் செயல்பட்டு வருகிறது. மகப்பேறு மையத்தில் தற்போது 2 மகப்பேறு உதவியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தூத்துக்குடி மாநகராட்சி விரிவடைந்த பின்னர் அதனுடன் பல பகுதிகள் இணைக்கப்பட்டதனால் கூடுதலாக மக்கள் குருஸ்புரம் மகப்பேறு மையத்தினை பயன்படுத்தி வருகின்றார்கள். தற்போது 2 மகப்பேறு உதவியாளர்களே உள்ளதால் கர்ப்பிணி பெண்களுக்கு முறையாக தடுப்பூசி போடுதல், பேறுகாலம் பார்த்தல் மற்றும் மகப்பேறு சப்மந்தமான அனைத்து பணிகளையும் மேற்கொள்ள சிரமமாக உள்ளது. எனவே இதனை தவிர்க்கும் பொருட்டு National Urban Health Mission வழிகாட்டுதலின் படி மேலும் 1 மகப்பேறு உதவியாளரை ஒப்பந்த அடிப்படையில் 1 வருடத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்திக் கொள்ளுவதற்கும், தொகுப்பு ஊதியமாக ரூ 12500/– வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்1. 9739/14 | 147) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது |

16)இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பரிவு அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க இனஙகளுக்கான (D & O) உரிமக் கட்டணம் பல வருடஙகளாக திருத்தி அமைக்கப்படாமல் உள்ளது. எனவே கீழ்க்கண்ட தவிர்க்க இயலாத காரணஙகளால் உரிமம் கட்டணம் திருத்தியமைக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள உரிமக் கட்டணம் அட்டவணை 1996ம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி நகராட்சியாக இருந்தபோது வெளியிடப்பட்டதாகும். தற்போதுள்ள தூத்துக்குடி மாநகராட்சி சட்ட விதிகளின்படி உரிமக் கட்டணம் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில் எடுத்துக்கொண்டால் குறைந்த பட்சம் 5 முறையாவது திருத்தி அமைக்கப்பட்டிருக்க வேண்டும். மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின் மற்றும் இந்த 18 ஆண்டு கால இடைவெளியில் நகரின் எல்கைக்குள் பல்வேறு புதிய தொழில்கள் மற்றும் வர்த்தக நிறுவனஙகள் துவஙகப்பட்டுள்ளன. ஆனால் இவற்றிற்கு ஏற்புடைய உரிமக் கட்டணம் தற்போது நடைமுறையில் உள்ள அட்டவணையில் இல்லை. இம்மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள தூத்துக்குடி ரூரல், சஙகரப்பேரி, மீளவிட்டான், முத்தையாபுரம், அத்திமரப்பட்டி ஆகிய ஐருந்து கிராம பஞ்சாயத்துகளுக்கு ஏற்கனவே ஊராட்சி ஒன்றியஙகளால் நடைமுறையில் அமுலில் உள்ள கட்டணத்தை விட மாநகராட்சியில் உள்ள அட்டவணையில் உள்ள கட்டணம் மிகவும் குறைவாக உள்ளது.

மாநகராட்சி பகுதிகளுடன் புதியதாக இணைக்கப்பட்ட 5 ஊராட்சி பகுதிகளையும் இணைத்து மூன்று ஆண்டுகள் நிறைவடைவதால் அவற்றையும் ஒருஙகிணைத்து திருத்தி அமைக்கவேண்டியது அவசியமானதாக உள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள 1996ல் வெளியிடப்பட்ட உரிமக்கட்டண அட்டவணையை தற்போதைய பண மதிப்பு அடிப்படையில் பார்க்கும் பொழுது ஆறு மடஙகு பண மதிப்பு உயர்ந்துள்ளது. மற்ற மாநகராட்சிகளோடு ஒப்பிடுகையில் தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள உரிமக்கட்டணம் மிகவும் குறைவாகவே உள்ளது. மாநகராட்சியின் நிர்வாக செலவினஙகள் பல மடஙகு உயர்ந்து வரும் நிலையில் அவற்றை ஈடுகட்டுவதற்கு உரிமக் கட்டணத்தொகை திருத்தியமைப்பது மிகவும் அவசியமாகிறது. எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு உரிமக் கட்டணம் திருத்தியமைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தூத்துக்குடி மாநகராட்சி – பொது சுகாதாரம் – அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க தொழில் உரிமம் கட்டணம் வசூல் செய்வது – திருத்திய கட்டண விபரம் தயாரித்தல்**

| வ. எண் | வியாபாரத்தின் பெயர் | தற்போது நடைமுறையில் உள்ள கட்டண விபரம் | | | | தற்போது உயர்த்தப்பட வேண்டிய கட்டண விபரம் தூத்துக்குடி மாநகராட்சி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | தூத்துக்குடி மாநகராட்சி | | கோவை மாநகராட்சி | மதுரை மாநகராட்சி | | |
| | | 1997 | 2002 | 2000 | 2009 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காற்றூட்டிய பானங்கள் தயாரித்தல் (சோடா கலர்) போன்ற பானங்கள் | மனித பலத்தால் | 300 | 500 | – | – | 1500 | |
| | | இயந்திர பலத்தால் | 400 | – | – | – | 2000 | |
| | | 10 கு.வே.க்குமேல் | – | – | 1200 | | 2500 | |
| 2 | போர் தளவாடங்கள் உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், சுத்தம் செய்தல் (Ammunitions) | | – | – | 3000 | 3000 | 5000 | |
| 3 | சாராயம் , பீர் மற்றும் மதுபானஙகள் உற்பத்தி மற்றும் விற்பனைசெய்தல் | குறிப்பு – மாநகராட்சி எல்கைக்குள் தயாரிப்பு தடை செய்யப்பட்டுள்ளது. | – | – | 7000 | 2000 | 10000 | |
| 4 | மாவிலான பொருட்கள் தயாரிப்பது, சேமித்து வைப்பது (Article made of Flour) | அ) மனித சக்தியால் தயாரிப்பதற்கு | 25 | 500 | 450 | 500 | 500 | |
| | | ஆ) இயந்திர சக்தியால் தயாரிப்பதற்கு | – | – | 2000 | 1000 | 2500 | |
| | | இ) சேமியா தயாரித்தல் | 150 | – | 750 | 500 | 750 | |
| | | சேமித்தல் விற்பனை செய்தல் | – | 500 | – | 300 | 1500 | |
| 5 | சாம்பல் (Ashes) | சேமித்து வைத்தல் (அ) சுத்தம் செய்தல் | – | – | 75 | – | | |
| | | அ) ஒவ்வொரு 100 ச.அடிக்கும் அதன் பாகத்திற்கும் | – | – | 75 | 100 | 300 | |
| | | ஆ) உயர்ந்த பட்சம் | – | – | 1500 | 300 | 6000 | |
| 6 | பீடி மற்றும் புகையிலை சேமித்து வைத்தல் (அ) விற்பனை செய்தல் | குறிப்பு – மாநகராட்சி எல்கைக்குள் தயாரிப்பு தடை செய்யப்பட்டுள்ளது. | 300 | 1000 | 500 | 500 | 2000 | |
| 7 | பிஸ்கோத்து சுடுதல், தயாரித்து சேமித்து வைத்தல் அல்லது விற்பனை செய்தல் (வீட்டுப் பயனுக்கு அல்லாத) | மொத்த விற்பனை | 500 | – | 1000 | 1000 | 2500 | |
| | | சில்லறை விற்பனைக்கு | 250 | – | 250 | 250 | 1250 | |
| 8 | குருதி சேமித்து வைத்தல் சுத்தம் செய்தல் அல்லது விற்பனை செய்தல் | | 150 | 500 | 500 | 1000 | 750 | |
| 9 | எலும்புகள் சேமித்து வைத்தல் அல்லது சுத்தம் செய்தல், விற்பனை செய்தல் | | 150 | 1000 | 375 | 500 | 1000 | |
| 10 | தவிடு மொத்தமாக சேமித்து வைத்தல் அல்லது விற்பனை செய்தல் | அ) 25 மூட்டைக்கும் அதற்கு குறைந்த அளவுக்கும் | 100 | 250 | 150 | – | 500 | |
| | | ஆ) 25 மூட்டைக்கு மேல் | 500 | – | 900 | 600 | 2500 | |
| 11 | ரொட்டி தயாரித்தல், சேமித்து வைத்தல் அல்லது விற்பனை செய்தல் (வீட்டு பயனுக்கு அல்லாத) | 3 ஆட்களும் அதற்கு குறைவாக வேலை செய்யுமிடம் | 200 | – | 300 | 350 | 1000 | |
| | | 3 ஆட்களுக்கு மேல் வேலை செய்யும் இடம் | – | – | 300 | 350 | 1200 | |
| | | இயந்திர சக்தியால் | – | – | 1000 | 1000 | 4000 | |
| | | சில்லறை விற்பனை செய்ய | – | 500 | 150 | 100 | 1500 | |
| 12 | செங்கற்கள் உற்பத்தி செய்தல் | அ) நாட்டு செங்கல் | 300 | 2500 | 500 | 500 | 2500 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆ) சேம்பர் செங்கல் | – | – | 1000 | 1000 | 4000 | |
| | | இ) கிராதி செங்கல் | – | – | 1500 | 1500 | 6000 | |
| 13 | கற்பூரம் தயாரித்தல் | கொதிக்க வைத்தல் | 225 | 500 | 300 | 500 | 1125 | |
| | | சில்லறை விற்பனை செய்தல் | 150 | – | 150 | 300 | 750 | |
| | | சேமித்து வைத்தல் | 150 | – | 150 | 100 | 750 | |
| 14 | மெழுகுவர்த்தி தயாரித்தல் அல்லது மொத்தமாக சேமித்து வைத்தல் | | 100 | 500 | 300 | 250 | 500 | |
| 15 | கம்பளம் தயார் செய்தல், நெய்தல் | | 100 | 500 | 175 | 500 | 500 | |
| 16 | முந்திரி கொட்டையில் இருந்து பருப்பு எடுத்தல் அல்லது மொத்தமாக சேமித்து வைத்தல் | | 150 | 500 | 1000 | 300 | 750 | |
| 17 | நரம்பு கம்பி தயாரித்தல் சுத்தம் செய்தல் அல்லது சேமித்து வைத்தல் | தயாரித்தல் | – | – | 300 | 500 | 1200 | |
| | | சேமித்தல் விற்பனை செய்தல் | – | – | 150 | 300 | 600 | |
| 18 | சிமெண்ட் தயார் செய்தல் சுத்தம் செய்தல் அல்லது சேமித்து வைத்தல் | சேமித்து வைத்தல் | 250 | 2500 | 2500 | 1000 | 2500 | |
| | | தயாரித்தல் | – | – | 3000 | 3000 | 12000 | |
| | | மொத்த விற்பனை | 500 | – | 1000 | 1500 | 2500 | |
| | | சில்லறை விற்பனை | 250 | – | 500 | 560 | 1250 | |
| 19 | கட்டை கறி மொத்தமாக சேமித்து வைத்தல் அல்லது சுத்தம் செய்தல் அல்லது விற்பனை செய்தல் | விற்பனை செய்தல் 400 சதுர அடிக்கும் அதன் பாகத்திற்கும் | 75 | 1000 | 300 | 300 | 1000 | |
| | | 400 சதுர அடிக்கு மேல் | 225 | – | 750 | 100<br>500 | 3000 | |
| 20 | இரசாயண பொருட்கள் எந்த ஒரு செய்முறையிலாவது உற்பத்தி செய்தல், சுத்தம் செய்தல், சேமித்து வைத்தல் | | 300 | 2500 | 300 | 800 | 2500 | |
| 21 | மிளகாய் பொடி இயந்திரம் மூலம் அரைப்பது | | 100 | – | 300 | 200 | 500 | |
| 22 | மிளகாய் வற்றல் மொத்தமாக சேமித்து வைத்தல் அல்லது விற்பனை செய்தல் | 50 மூட்டைக்கு உட்பட | 500 | 750 | 300 | 200 | 2500 | |
| | | 50 மூட்டைக்கு மேல் | – | – | 750 | – | 6000 | |
| 23 | குளோரைட் கலவைகள் எந்த ஒரு செய்முறையில் உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல் | | 300 | 5000 | 150 | 500 | 5000 | |
| 24 | பழைய துணிகள் போர்வைகள் மெத்தை தலையணைகள் சேமித்து வைத்தல் விற்பனை செய்தல் அல்லது வாடகைக்கு கொடுத்தல் | அ) பழைய துணிகள் சேமித்து வைத்தல் | 150 | 500 | 150 | 200 | 750 | |
| | | ஆ) போர்வை மெத்தை சேமித்து வைத்தல் | 100 | 500 | 300 | 200 | 500 | |
| | | போர்வை மெத்தை விற்பனை செய்தல் | – | – | 600 | 400 | 2400 | |
| 25 | துணிகள மற்றும் நூல் சாயம் போடுதல் | | 150 | 2500 | 1500 | 500 | 2500 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 26 | நிலக்கரி, சேமித்து வைத்தல் சுத்தம் செய்தல் அல்லது விற்பனை செய்தல் | அ) 400 ச.அடி வரை | 500 | 1000 | 500 | 150 | 2500 | |
| | | ஆ) 400 ச.அடிக்கு மேல் | – | – | 1000 | 500 | 4000 | |
| 27 | தேங்காய் நார் தயார் செய்தல் | அ) 400 ச.அடி வரை | – | – | 300 | 200 | 1200 | |
| | | ஆ) 400 ச.அடிக்கு மேல் | – | – | 400 | 500 | 1600 | |
| 28 | எரியும் பொருட்கள் சேமித்து வைத்தல் தயாரித்தல் விற்பனை செய்தல் | 1 M3 க்கும் அதற்கு குறைந்த அளவிற்கும் | – | – | 500 | – | 2000 | |
| | | 1 M3 மேல் 50லிட்டர் வரை | – | – | 750 | – | 3000 | |
| | | 50M3 க்கு மேல் | – | 3000 | 1500 | – | 9000 | |
| | | அ) மூங்கில் 200 ச.அடி வரை | – | – | 450 | 300 | 1800 | |
| | | 200 ச.அடிக்கு மேல் | – | – | 900 | 600 | 3600 | |
| | | ஆ) தோட்டா மருந்து சேமித்தல் விற்பனை செய்தல் | 300 | – | 1500 | 1000 | 2000 | |
| | | இ) ஒரே இடத்தில் வானமும் பட்டாசு வெடியும் சேமித்தல் அமுத்துதல் சுத்தம் செய்தல் | – | 1000 | – | – | 3000 | |
| | | அ) தயாரித்தல் மொத்த விற்பனை | 300 | 1000 | 1500 | 100 | 1500 | |
| | | ஆ) சில்லறை விற்பனை | 300 | 1000 | 600 | 300 | 1500 | |
| | | இ) தீப்பெட்டி மற்றும் தீக்குச்சி செய்தல் மற்றும் விற்பனை | – | 2500 | 750 | 1000 | 3000 | |
| | | 2. திரைப்பட சுருள் சேமித்து வைத்தல் | – | – | – | | | |
| | | ஆ) திரையரங்கில் வெளியிடுவதற்கு வெளியீட்டு கம்பெனியாளரால் சேமித்து வைத்தல் | 250 | 2500 | 2000 | 1000 | 2500 | |
| | | ஆ) கடைகளில் படச்சுருள் புகைப்படம் சேமிப்பு மற்றும் விற்பனை | 300 | 2500 | 500 | 1000 | 1500 | |
| | | இ) செல்லூலாயிட் பொருட்களை ஒரே சமயத்தில் சேமித்து வைத்தல் விற்பனை செய்தல் | 75 | – | 500 | 500 | 600 | |
| | | 3) ஒரே சமயத்தில் மண்ணெண்ணை சேமித்து வைத்தல் | – | – | – | – | – | |
| | | அ) குறைந்த பட்சம் 1000 லி. வரை | 100 | 500 | 500 | 50 | 500 | |
| | | ஆ) 1000 லி.க்கு மேல் 2000 லி. வரை | 200 | 1000 | 1000 | 300 | 1000 | |
| | | இ) 2000 லி. மேல் 5000 லி. வரை | 300 | 1000 | 2000 | 2000 | 1500 | |
| | | ஈ) 5000 லிட்டருக்கு மேல் | 500 | 1000 | 3000 | – | 2500 | |
| | | உ) பெட்ரோலியம் அல்லது பெட்ரோலிய சம்பந்தப்பட்ட பொருட்கள் | 150 | 3000 | – | 5000 | 3000 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | ஊ) ஆபத்து<br>விளைவிக்க கூடிய<br>பெட்ரோலியம் | 500 | | – | – | | |
| | | 1. 1000 லி.க்கு அதன்<br>பாகத்திற்கும் | – | – | 1000 | – | 2000 | |
| | | 2. 1000 லி.க்கு மேல | – | – | 2000 | 2000 | 4000 | |
| | | 3. கேஸ் நிரப்பப்பட்ட<br>சிலிண்டர் சேமித்து<br>வைத்து விற்பனை<br>செய்தல் | – | 3000 | 1500 | 3000 | 3000 | |
| | | எ) குருடாயில் | | – | – | | | |
| | | 1. 1000 லிட்டர் வரை | 150 | – | 250 | 700 | 1000 | |
| | | 2. 1000 லிட்டருக்கு<br>மேல் | – | – | 500 | 1000 | 2000 | |
| | | ஏ) காகிதம் கட்டுதல்,<br>அடுக்குதல், | 100 | – | 750 | 1000 | 500 | |
| | | ஐ) பழைய<br>புத்தகங்களின்<br>அட்டைகள் மரத்தூள்<br>ஒட்டுப் பொருட்கள்<br>சேமித்து வைத்தல் | | | | | | |
| | | 1. மொத்தமாக சேமித்து<br>விற்பனை செய்தல் | 100 | – | 300 | 250 | 1200 | |
| | | 2. சில்லரையாக<br>சேமித்து விற்பனை<br>செய்தல் | – | – | 150 | 100 | 600 | |
| 29 | வீட்டுப் பயனுக்கு அல்லாத<br>எரியக் கூடிய<br>பொருள்களை சேமித்தல்<br>அல்லது விற்பனை<br>செய்தல் | பழைய பேப்பர்கள்<br>பிளாஸ்டிக் பொருட்கள்<br>உள்ளிட்ட | – | 2500 | 500 | 1000 | 2500 | |
| 30 | வீட்டுப் பயனுக்கு அல்லாத<br>திண்பண்டங்கள்<br>தயாரித்தல் | அ) 3 ஆட்களுக்கு மேல்<br>வேலை செய்யுமிடம் | 25 | 500 | 600 | 500 | 1500 | |
| | | ஆ) 3 ஆட்களுக்கு<br>குறைவாக வேலை<br>செய்யுமிடம் | – | 500 | 300 | – | 500 | |
| 31 | பருத்தி மொத்தமாக<br>அல்லது சில்லரையாக<br>சுத்தம் செய்தல், சேமித்து<br>வைத்தல் அல்லது<br>விற்பனை செய்தல் | 748 பவுண்டு எடை<br>உள்ள 100<br>பேல்களுக்கு மேல்<br>வைத்திருப்பது | 100 | 1000 | 9000 | – | 1000 | |
| | | 1. 25 பேல்களுக்கு<br>உட்பட | 50 | – | 1500 | 750 | 250 | |
| | | 2. 25 முதல்100 வரை | – | – | 3000 | 1000 | 500 | |
| 32 | பருத்தி விதை<br>மொத்தமாகவோ அல்லது<br>சில்லரையாகவோ<br>சேமித்து வைத்தல,<br>விற்பனை செய்தல் | அ) 50 மூட்டைக்கும்<br>அதற்கு குறைந்த<br>அளவுக்கும் | 100 | 750 | 600 | 300 | 750 | |
| | | ஆ) 50 மூட்டைக்கு<br>மேல் | – | – | 900 | – | 1500 | |
| 33 | பசுஞ்சாணை<br>உருண்டைகள் எந்த ஒரு<br>செய்முறையிலாவது<br>உற்பத்தி செய்தல்,<br>விற்பனை செய்தல்<br>அல்லது சேமித்து<br>வைத்தல் | | 50 | – | 150 | இலவசம் | 250 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 34 | கொழுப்பு எந்த ஒரு செய்முறையிலாவது உற்பத்தி செய்தல், சுத்தல் செய்தல் அல்லது சேமித்து வைத்தல் | | 300 | 1000 | 300 | – | 1500 | |
| 35 | மீனின் உபரி பொருட்கள் சேமித்து வைத்தல் அல்லது சுத்தம் செய்தல் | | 75 | 250 | 300 | – | 375 | |
| 36 | விறகு சேமித்து வைத்தல் அல்லது விற்பனை செய்தல் | 1000 ச.அடி வரை | 100 | 1000 | 300 | – | 1000 | |
| | | 1000 ச.அடிக்கு மேல் | 150 | – | 750 | – | 2000 | |
| 37 | மீன் சேமித்து வைத்தல் அல்லது விற்பனை செய்தல் | 1. சில்லறை விற்பனை | 75 | 300 | 250 | – | 375 | |
| | | 2. மொத்த விற்பனை | 500 | – | 1000 | – | 2500 | |
| 38 | மீன் எண்ணெய் தயார் செய்து விற்பனை செய்து சேமித்து வைத்தல் | | 100 | 250 | 450 | – | 500 | |
| 39 | சணல் உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் அல்லது சேமித்து வைத்தல் | 1000 சதுர அடிக்கு குறைவாக | – | 2000 | 150 | 200 | 2000 | |
| | | 1000 சதுர அடிக்கு மேல் | – | – | 450 | 450 | 3000 | |
